# <u>Chapter - 17 - Speech for 28th January 2023 – 1 - The Divine Soul</u>

சென்ற அத்தியாயத்தில் அதிமனதின் மூன்று நிலைகளை பற்றி பேசினோம். முதல் இரண்டு நிலை பிரம்மம் சிருஷ்டியில் இறங்கும் போது ஏற்படுவது என்றும், மூன்றாவது மீண்டும் பரிணாமத்தில் உயர உதவும் அது பற்றிய ஞானம் கொண்ட நிலை என்றும் பார்த்தோம். இந்த மூன்றாம் நிலை, மனதின் மூலம் உணர முடியாது என்று சொன்னாலும், இறை ஞானமாக பெற வேண்டும் என்று சொன்னாலும் - சில அனுபவங்களை நினைத்துப் பார்த்து அத்தகைய அனுபவங்களை ஆராய்ந்து பார்த்து, இந்த இறைவனை நோக்கிய மூன்றாம் நிலையை புரிந்துக் கொள்ள முடியும்.

அன்னை அன்பர் ஆன பிறகு அவர் விருப்பம் என்று செய்தவைகளை நினைத்தால் - அவருக்காக நாம் சில பண்புகளை எடுத்துக் கொண்டு செய்த போது, நடந்தவைகள் அதன் மூலம் நாம் பெற்ற திருவுருமாற்றங்களை, சித்த உயர்வை கவனித்தால், transormative qualities கவனித்தால் நாம் அது போன்ற மூன்றாம் நிலையை , படைப்பாற்றல் கொண்ட நிலையை  தொட்டு இருக்கிறோம் என்பதை புரிந்துக் கொள்ள முடியும்.

உதாரணமாக, சத்தியத்தை , உயர் சித்தத்தை, முழுமையை உணர்ந்த நிலைகள், வேறுபாடு முரண்பாடுகளுக்கு இடையே ஒருமையை, ஐக்கியத்தை உணர்ந்த தருணங்கள், வாழ்வில் நடப்பவை அனைத்தும் ஏதோ ஒரு காரணத்திற்காகவே நடக்கிறது என்று உணர்ந்த இடங்கள்,  நம் மனம், நோக்கமல்ல, அதை தாண்டிய ஏதோ ஒன்று செயல்படுகிறது என்று உணர்ந்த இடங்கள், நம் திறமை, திறன் ஆகியவற்றை முழுதும் வெளிக் கொணர்ந்து நம்மை வாழ்வு அடுத்த கட்டத்திற்கு உயர்த்திய இடங்கள், காரணமே தெரியாமல் நாம் அனர்தமாய் உணர்ந்த தருணங்கள், இது இறைவன் வந்த தருணம் என்று உணர்ந்த இடங்கள் , miracle என்று சொல்லும் அளவிற்கு பலன் பெற்ற இடங்கள், சிறு முயற்சிக்கு பத்து மடங்கு, நூறு மடங்கு பலன் கிடைத்த இடங்கள், காலத்தை வென்ற இடங்கள், என்னடா வாழ்க்கை என்னும் நிலையில் இருந்து, வாழ்விற்கு ஒரு நோக்கம் வந்து விட்டது என்றோ அதற்காக நாம் நிறைய நாட்கள் வாழ வேண்டும் என்ற ஆர்வமோ வந்த நேரங்கள், சமர்ப்பணம் சரணாகதி போன்றவை பூர்த்தியானதாக உணர்ந்த இடங்கள், உணர்வு, உடல், மனம் என்று ஆளுக்கு ஒரு பக்கம் இருக்காமல், நம் ஞானமும் , உறுதியும், நோக்கமும் ஒரே கோட்டில் உயர்சித்தத்திற்காக திடமாக நின்ற தருணங்கள், என்று அனைத்தையும் பொறுமையாக கவனத்திற்கு கொண்டு அன்று, அந்த கணத்தில், நம் மனம் நிலை இருந்த நிலையை ஆராய்ந்தால், அகந்தையில் இருந்து க்ஷண நேரம் வெளி வந்து இறைவனை

அல்லது இறைவனின் பார்வையில் வாழ்வை, உலகை பார்த்திருப்பது தெரியும். குறைந்த பட்சம் தோற்ற போதே வென்றாய் என்னும் அளவிற்கு நம் இயலாமையின் முழுமை புரிந்த தருணங்களாக அவை இருந்திருக்கும். அத்தகைய மனநிலையை சித்த பூர்வமாக கொண்டு வரமுடிந்தால் - conscious ஆக கொண்டு வர முடிந்தால், நம்மால் ஓரளவு இந்த மூன்றாம் நிலையை புரிந்துக் கொள்ள முடியும். இந்த மாதிரி இடங்களில் ஒன்று - இறைவனுடனான நம் ஐக்கியத்தை உணர்ந்திருப்போம். அல்லது இறைவனின் நீட்சி தான் நம்மை சுற்றியுள்ள, அனைத்தும் மனிதர்கள், செயல்கள் அனைத்தும் என்னும் விளக்கம் புரிந்திருக்கும். மூன்றாவதாக அது தான் நம் பரிணாமத்திற்கு உதவுகிறது என்றும் புரிந்து இருக்கும்.

இந்த மூன்று நிலைகளை நாம் அதிமனதின் மூன்று பரிமாணங்களாக புரிந்துக் கொள்ளலாம். அதன் மூலம் நாம் பெற்ற ஞானம் என்னவாக இருக்கும் என்றால் நாம் இறைவனின் படைப்பு, அல்லது அவனே நாமாக இருக்கிறோம், மீண்டும் அவனை அடைய வேண்டும் அல்லது அவனாக மாற வேண்டும் என்னும் தேடல், நான் யார் என்னும் கேள்வியில் இருந்து ஆரம்பிக்கும் . நம் படைப்பின் நோக்கமே பரிணாமத்தில் உயர்வது தான் என்பது புரியும். நடக்கும் அனைத்தையும் அந்த பார்வையில் பார்த்து - படைத்தவர், படைப்பு, அதை அனுபவிப்பவர் அனைத்தும் ஒன்றே என்னும் ஞானம் பெறும் நிலைக்கு வருவோம். நம்முள் இருக்கும், வெளிப்படுத்தும் கொள்கை, பண்பு, நோக்கம் ஆகியவற்றுக்கான ஆர்வம் கூடும்.. இந்நிலைகள் நாம் நம்முள் உள்ள ஆன்மாவை உணர்ந்ததற்கான அடையாளங்கள். அல்லது உள்ளே இருக்கும் ஆன்மா வெளிவர தொடங்கிவிட்டதற்கான அடையாளங்கள். அதை உள்ளே இருந்து தரும் ஒன்றைத்தான் நம் தைய்வீக ஆன்மா என்று புரிந்துக் கொள்ள போகிறோம்.

இவற்றை எல்லாம் சென்ற அத்தியாயத்தின் சாரத்தில் பொருத்திப்பார்க்கும் போது, அல்லது நம் அனுபவத்தில் பொருத்தி பார்க்கும் போது அன்னை மேல் அவரே நம் ஆன்மா என்று சில நமக்குத் தெரிந்த ஆன்மாவின் பண்புகளை பின்பற்றுகிறோம். இங்கொன்றும் அங்கொன்றுமாக நமக்கு தோன்றும் நேரங்களில், தேவையான நேரங்களில் பின்பற்றுகிறோம். ஆனால் பல நேரங்களில் நம்மால் தொடர்ந்து அந்த பாதையில் பயணிக்க முடிவதில்லை. ஒவ்வொரு === முன்னேறுவது போல தோன்றினாலும் பல நேரங்களில் ஒரே இடத்தில், ஒரே தளத்தில் நிற்பது போலவே இருக்கிறது .  ஆனால் அது போன்ற நேரங்களில் Life divine பற்றி நினைக்கும் போது, படிக்கும் போது சித்தம் உயர்வது போல இருக்கிறது. நாம் ஏன் இப்படி இருக்கிறோம் என்பதை ஒரு புது கண்ணோட்டத்தில் பார்க்கத் தோன்றுகிறது. உதாரணமாக, அதிமனதின் மூன்று நிலைகளை பார்த்தோம். அவற்றையெல்லாம் தத்துவ ரீதியாகவும், ஓரளவு

நடைமுறையில் புரிந்துக் கொள்ள சில ஒப்பீடுகளையும் செய்து பார்த்தோம். அதாவது நம் மேல் மனதில் அதன் அனுபவங்களைக் கொண்டு அதிமனதை புரிந்துக் கொள்ள நினைத்தோம். அப்போது அடிப்படை புரிதலாக நமக்கு கிடைத்தது என்னவென்றால் தத்துவமெல்லாம் கிடக்கட்டும் நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கேயே சென்று விட்டால் தான் நம்மால் ஆனந்தமாக இருக்க முடியும் என்னும் புரிதலுக்கு வருகிறோம். அப்படித்தோன்றும் நேரங்களில் தான் நாம் சித்தத்தில் அடுத்த கட்டத்திற்குச் செல்கிறோம். அந்த புரிதலை வாழ்வில் வெளிப்படுத்தும் போது தான் நமக்கு ஆனந்தம் அல்லது ஒரு அடையாளமான நிம்மதி அமைதி நமக்கு கிடைக்கிறது. தத்துவமாக புரியும் நம் இறைத்தன்மை நடைமுறையில் அதை முற்றிலும் இழந்து அல்லது பிரிந்து மனிதன் என்ற பெயரில் ஒரு விலங்காக இருப்பது புரிகிறது. இந்த நிலையில் இருந்து நமக்கு தெரிந்த, புரிந்த அளவிலான உயரசித்தத்திற்கு இறைத்தன்மைக்கு மீண்டும் நாம் செல்ல வேண்டும், அதற்கு தேவையான பண்புகள் நமக்கு எட்ட வேண்டும். அதை நாம் எப்படி எட்ட முடியும். அதற்கு என்னவென்ன மாற்றங்களை நாம் கொண்டு வரமுடியும், அதற்கான வழிகள் என்னென்ன இருக்கின்றன என்னும் கேள்விகள் நம்முள் எழ வேண்டும். இதை கர்மயோகி முதல் வழியாக சொல்வது நம் குறைகள் அனைத்தையும் நமக்கு குறை என்று உணர்ந்த அனைத்தையும் களைய முன் வரவேண்டும். நம் கற்பனையில் அல்லது புரிதலில் என்ன தான் இறைவனை வரையறையற்றவன் என்று நினைத்தாலும் உண்மையில் உணர்வில் ஒரு குறுகிய, எல்லைக்குட்பட்ட வரையறைக்குட்பட்ட, ஒருவராகத்தான் நாம் இறைவனை உணர்கிறோம். அதாவது சர்வ வல்லமை பொருந்திய தெய்வம் என்று நினைப்பதற்கு நம்மைப் பொறுத்தவரை அன்னைக்கு எல்லைகளை வகுக்கிறோம்.

உதாரணமாக நம் பிராத்தனைகளை பார்த்தால் இது புரியும். நமக்குத் தெரியாத வழி அன்னைக்கும் தெரியாது என்று ஒரு அடிப்படை நினைப்பு இருப்பதை கவனித்துப் பார்த்தால் தெரியும். பிரார்த்தனையை எப்படி நிறைவேற்ற வேண்டும், அதற்கான வழிகள் என்ன என்று மனதில் ஓடுவது தெரியும். என் பையனுக்கு நல்ல வாழ்க்கை, ஆனந்தமயமான வாழ்க்கை வேண்டும் என்று சுருக்கமாக பிரார்த்தனை செய்ய மாட்டோம். இந்த college இல் இந்த seat வேண்டும் என்று ஆரம்பித்து, இந்த கம்பெனியில் இந்த சம்பளத்தில் வேலை வேண்டும் என்று ஆர்மபித்து, இந்த உயரத்தில், இந்த அந்தஸ்தில், இந்த நிறத்தில் வேண்டும் என்ற அனைத்து விளக்கங்களோடு தான் நம் பிரார்த்தனை இருக்கும். அதாவது நாம் தெய்வம் என்றும், அனைத்தையும் நடத்துபவர் , அனைத்து ஞானமும் கொண்டவர், முக்காலமும் அதற்கு மேலும் உணர்ந்தவர் என்று நினைக்கும் அன்னைக்கே எல்லைகளை வகுக்கிறோம் என்பது நாம் செய்யும் முதல் தவறு.

நாமே எல்லைக்குட்பட்டவர்கள் கிடையாது என்னும் போது நாம் எப்படி இறைவனுக்கு எல்லைகளை வகுக்க முடியும். நாமே இறைவன் அல்லது இறைவன் தான் நாமாக இருக்கிறோம் என்னும் போது, தத்துவமாகவாவது அதை ஏற்றுக் கொள்ளும் போது, அதை ஒட்டி நம் மனம் செல்லாமல் அவற்றுக்கு வரையறை விதிப்பது, எல்லைக்குட்படுத்துவது நம் அறியாமை தான் என்பது புரிவது நம் அகந்தை புரிவது. அதை புரிய வைக்க தெய்வத்தைப் பற்றிய நினைவு இருக்கும் ஒன்றால்  தான் முடியும். இறைவன்

அடுத்த கூடலில் அடுத்த அத்தியாயத்தை பற்றிய கருத்துக்ககளை என் பார்வையில் பகிர்ந்துககொள்கிறேன்.

==============================================================